(6 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 8155** **Sub. Code : PTLM 44**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
APRIL 2022.

Fourth Semester

தமிழ் – Core

இலக்கிய மானிடவியல்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இனம், இனக்குழு, மக்கள் என்ற பொருளைத் தரும் ஆங்கிலச் சொல்

(அ) ethnography (ஆ) ethonoes

(இ) ethnos (ஈ) Ethnology

2. ஒரு தனிப்பட்ட சமூகத்தைப் பற்றியதாக அமைவதால் இனவரைவியல் நூல்கள் அனைத்தும் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

(அ) மானிடவியல் (ஆ) சமூகவியல்

(இ) தனிவரைவு நூல்கள் (ஈ) மனிதவியல்

3. ஆய்வு செய்யும் சமூகத்தின் அத்தனை விடயங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கினை மட்டும் முன்வைத்து ஆராய்வது

(அ) இயங்கியல்சார் (ஆ) முழுமைசார்

(இ) தனித்துவம்சார் (ஈ) ஒழுங்கமைப்புசார்

4. "தென்னிந்திய தொதவர்கள் : ஒரு புதிய பார்வை" – என்ற நூலின் ஆசிரியர்

(அ) ஆஸ்கார் லூவிஸ் (ஆ) அந்தோணி வாக்கர்

(இ) கிளிஃபோர்டு (ஈ) மேரி டக்ளஸ்

5. அடர்த்தியான வரைவியல் என்ற புதிய வகையினத்தை உருவாக்கியவர்

(அ) கிளிஃபோர்டு (ஆ) மேரி டக்ளஸ்

(இ) சூசன்பாசுனெட் (ஈ) மேரி கியூரி

6. "பைங்குழைத் தழையர் பழையர் மகளிர்

கண்திரள் நீர் அமை கடிப்பின் தொகுத்து" – இவ்வரிகள் இடம்பெறும் நூல்

(அ) நற்றிணை

(ஆ) அகநானூறு

(இ) புறநானூறு

(ஈ) இலக்கிய மானிடவியல்



*Nesamony Memorial Christian College, Marthandam*

7. சங்க காலத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில்களைக் கொண்ட ஒருவகையான ———— பொருளாதார முறையினைக் கொண்டிருந்தனர்

(அ) மிகை (ஆ) தன்நிறைவு

(இ) கலப்பு (ஈ) பண்டமாற்று

8. "அவரை கொய்யுநர்" – என்ற தொடர் இடம்பெற்றுள்ள இலக்கியம்

(அ) நற்றிணை

(ஆ) அகநானூறு

(இ) புறநானூறு

(ஈ) இலக்கிய மானிடவியல்

9. இறந்தவர்களை அடக்கம் செய்வதற்குப் பயன்படும் மண்ணால் செய்த பொருளின் பெயர்

(அ) ஈமத்தாழி (ஆ) ஏமத்தாழி

(இ) மக்கள் தாழி (ஈ) மூத்தோர் தாழி

10. தொல்காப்பியம் சுட்டும் முதற்பொருளை இனவரைவியலில் எத்தனை வகையாகப் பிரிப்பர்?

(அ) 2 (ஆ) 3

(இ) 4 (ஈ) 5



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) இலக்கிய மானிடவியல் என்ற சொல்லை அறிமுகம் செய்க.

(அல்லது)

(ஆ) ஒரு சமூகத்தைப் பற்றி ஆராயும்போது இனவரைவியலாளர்கள் கவனத்தில் கொள்ளக்கூடிய இன்றியமையாத கூறுகள் எவையெவை? விளக்குக.

12. (அ) இனவரைவியலின் இயல்புகள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) இலக்கியத் தரவினை மானிடவியல் தரவாக எங்ஙனம் ஏற்றுக் கொள்ள இயலும்? – விளக்குக.

13. (அ) படிமலர்ச்சிக் கோட்பாடு என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) விளக்குக:- மொழியின் படிமலர்ச்சி.



*Nesamony Memorial Christian College, Marthandam*

14. (அ) திணைக் கோட்பாட்டின் படிநிலை வளர்ச்சிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) விளக்குக:- திணைக் கோட்பாடு.

15. (அ) சங்க இலக்கியத்தில் காணலாகும் இரும்புப் பண்பாடு குறித்த பதிவுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியத்தை மானிடவியல் நோக்கில் ஆய்வதால் ஏற்படும் சிக்கல்களை எடுத்துரைக்க.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) இனவரைவியலின் அடிப்படைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) நாவல் ஒன்றினை இனவரைவியல் நோக்கி ஆய்க.

17. (அ) இயங்கியல் சார்ந்த இனவரைவியல் வகைப்பாடுகளைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

(ஆ) வரலாறு சார்ந்த இனவரைவியல் ஆய்வுகள் குறித்துக் கட்டுரைக்க.

18. (அ) தாய்வழிச் சமூக அமைப்பின் நான்கு வகையான அமைப்பாக்கங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) படிமலர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படைகளை விளக்குக.



19. (அ) திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) "தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும்" – என்னும் இயலில் நீவிர் அறியும் மானிடவியல் குறித்த செய்திகளை விளக்குக.

20. (அ) உணவு உற்பத்தியும் பரிமாற்ற உறவுகளும் என்னும் தலைப்பில் மானிடவியல் நோக்கில் ஆய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்ககால இனக்குழுச் சமூகத்தின் அமைப்பினை ஆய்க.

———————



*Nesamony Memorial Christian College, Marthandam*